11th November 1965]

(*b*) The assistance of Rs. 1,346.52 lakhs received from the Government of India and the Life Insurance Corporation has been disbursed to the various Housing agencies.

திரு. வை. சங்கரன் : இந்த ஹௌசிங் ஸ்கிமிற்குக் கொடுக்கப் பட்ட பணத்திலே ஒரு கணிசமான பகுதி மின்சாரத் திட்டங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு விரிவான பதில் சொல்ல வேண்டும். சாதாரணமாக இது பட்ஜெட்டிலே விவாதிக்கப்படவேண்டிய விஷயம். மத்திய சர்க்கார் நமக்குப் பல துறைகளில் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு அதிகமாக நாம் 'ஹௌசிங்'-ல் செலவழித்து இருக்கிறோம். அதிகமாகச் செலவழித்தது, 'நான்-ப்ளான்ஃ பண்ட்ஸ்' லிருந்து செலவழித்து இருக்கிறோம்.

Bus permits

*452 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of temporary permits granted to spare buses and route buses by the Regional Transport Officers of North Arcot and Chingleput districts to meet the traffic demand during the Audi-Krithigai festival to Thiruthani in 1965; and

(*b*) the income accrued to the Government by way of surcharge in granting the above temporary permits?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 329.

(*b*) Rs. 11,563.37.

SRI S. NANJUNDA ROW : Normally a bus plies a distance of two hundred miles. But during festival days some excess miles are permitted. Certain Regional Transport Officers permit an excess of twenty or thirty miles. Will the Government be pleased to consider the question of permitting an excess of fifty miles?

THE HON. SRI R. VENKATARAMAN : This is a request, not a question.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், இந்த உற்சவ காலங்களில் ஸ்பெஷல் பர்மிட் என்று மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர் கள் கொடுக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பார்வைக்கு வருமா? சர்சார்ஜ் கொடுக்கவும் வழி செய்திருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்பெஷல் பர்மிட் கொடுத் தால் அதற்குக் கட்டணம் கட்டவேண்டுமென்று விதிகள் இருக் கின்றன.

[11th November 1965

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, திருத்தணி ஆடிக் கிருத்திகைக்காக விடப்பட்ட பஸ்களுக்கு ஸ்பெஷல் பர்மிட்டுக்கு மனுச் செய்துகொண்டு—ஆடிக் கிருத்திகை 10-ம் தேதி என்று சொன்னால்—9-ம் தேதி அல்லது 10-ம் தேதி கொடுத்தார்கள். ஏன் இதை முன்பாகவே கொடுக்கக் கூடாது? இன்ஸ்பெக்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கலெக்டருக்கு மாற்றவாவது அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தமாதிரி புகார் சர்க்காரிடத்தில் வரவில்லை. இதைப் பற்றி எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. தங்கவேலு: இந்த தாற்காலிக பர்மிட் வழங்கப்படுவதற்கு சர்சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. இது ஆடிட் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்கார் கணக்குகள் எல்லாம் தணிக்கை செய்யப்படுகின்றன.

பொறியியற் கல்லூரிகளில் வகுப்பு நாட்கள்

* 453 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள எஞ்சினீயரிங், பாலிடெக்னிக் கல்லூரிகளில் வாரத்திற்கு ஐந்து நாள் மட்டும் வகுப்புகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமுல் செய்யப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) As an experimental measure the Engineering Colleges and Polytechnics under the control of the Director of Technical Education are working for five days in a week with effect from the second term of the academic year 1965–66.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, என்ஜினீயரிங் கல்லூரி, பாலிடெக்னிக் பள்ளிகள் போன்றவைகளில் அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள இட வசதியைப் பெருக்கும் வகையில் ஷிஃப்ட் சிஸ்டம் ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா? எல்லா இடங்களிலும் முடியாது என்றாலும் வசதி உள்ள இடங்களிலாவது ஷிஃப்ட் சிஸ்டம் ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்ற ஆண்டே செய்யப்பட்டு விட்டது. 120 மாணவர்கள் சேர்க்கவேண்டிய இடங்களில் 180 மாணவர்களைச் சேர்த்திருக்கிறோம். அதற்கு அதிகமாகச் சேர்த்தால் கொடுக்கும் பயிற்சியின் தரம் குறைந்து விடும் என்று நினைக்கிறோம். 60 மாணவர்கள் அதிகமாக எடுக்கப்பட்டவர்